* 538 வினா—திரு. ஜி. ராமசாமி :

திரு. டி. சி. திம்மராய கவுண்டர் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், நாட்ராம்பள்ளியில் ஒரு பயணியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. ராமசாமி: தலைவரவர்களே, நாட்ராம்பள்ளிக்கு அருகில் பாலாற்றின் குறுக்கே புல்லூர் என்ற இடத்தில் 4½ கோடி ரூபாயில் பெரிய அணை கட்டுவதாக இருக்கிறது. அந்த இடத்தில் அதிகாரிகள் வந்து தங்க, கிருஷ்ணகிரி, வாணியம்பாடி ஆகிய இரண்டு இடங்களில்தான் பயணியர் விடுதிகள் இருக்கின்றன; இருபது, 25 மைல் தூரத்திற்கு இல்லாமல் இருப்பதால் அங்கு பயணியர் விடுதியை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, புல்லூர் அணைக்கு ஒப்பம் அளிக்கப்பட்ட பிறகு இதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

Loan faciliaties for farmers in the Nilgiris

* 539 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture, be pleased to state—

(*a*) whether the Indo-German–Nilgiris Project in the Nilgiris has opened a fund scheme to assist the small farmers; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) ஜெர்மன் கூட்டிணைவுக் குடியரசால் வழங்கப்பட்ட ரூ. 11 இலட்சம் தொகையைக் கொண்டு, நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறிய விவசாயிகளுக்கு பயிரிடுவதற்கு உதவும் பொருட்டு ஒரு குறுகிய காலக் கடன் திட்டத்தை செயல்படுத்தும் அமைப்பு ஒன்றிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.